# இரட்சிப்பு

## RATCHIPPU

RATCHIPPU = SALVATION


Volume-13 | July-2023 | Issue-02

Price Rs.5-00 | Annual Subscription Rs.60/-



## இயக்குநர் கடிதம்...

From Mission Director's Desk




கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!

இயேசுவின் இனிய திருப்பெயரில் அனைவருக்கும் எங்கள் அன்பின் வாழ்த்துக்கள். புதிய பள்ளிகளுக்கு, புதிய கல்லூரிகளுக்கு, புதிய வகுப்புகளுக்குச் செல்லும் நம் பிள்ளைகளுக்கு கிருபை வரங்களும் ஞானவரங்களும் வழங்கப்பட ஜெபித்துக்கொள்வோம்.

நம் நாட்டின் அரசியல் சூழ்நிலைகளுக்காக, சிறப்பாக தமிழ்நாட்டின் அரசியல் ஸ்திரத் தன்மைக்காக ஜெபித்துக்கொள்வோம். தமிழ்நாட்டில் மதவாதம் மற்றும் பிரிவினைவாதத்தில் ஈடுபடுகிற அரசியல் மற்றும் சமூக இயக்கங்கள் முற்றிலுமாக அழிக்கப்பட ஜெபிப்போம்.

இரட்சிப்பு வேதாகம போட்டிகள்-2022ல் பரிசுபெற்றவர்களுக்கு பரிசுகள் அனுப்பப்பட்டு விட்டன. நமது ஊழிய இயக்குநரின் இம்மாத ஊழியங்களுக்காக ஜெபித்துக் கொள்ளுங் கள். ‘இரட்சிப்பு’ பத்திரிக்கை ஊழியங்கள், கைப்பிரதி ஊழியங்கள், காணொலி-செய்தி ஊழியங்கள், வலைதள ஊழியங்கள் (www.ratchippu.in/ratchippu.in), புத்தக-வெளியீட்டு ஊழியங்கள், NMS-MISSIONARY ஊழியங்கள், திருச்சபையோடு இணைந்து செய்யும் ஊழியங் கள் உள்ளிட்ட அனைத்து ஊழியங்களும் சிறப்பாக நடைபெறவும் ஆசீர்வதிக்கப்படவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

நமது ‘ஜெப-ஜன்னல்’ ஜெப-நேரங்ளில் (ஜூலை 14, 21, 28) இணைந்து ஜெபிக்கவும், ‘அனைவரும்-ஊழியத்தில்’ - என்ற நமது கைபிரதி ஊழிய திட்டத்தில் இணைந்து செயல்படவும் உங்களை அன்புடன் அழைக்கிறோம். இரட்சிப்பு வேதாகம போட்டிகளில் பங்குபெறவும் உங்களை அன்புடன் அழைக்கிறோம். வேதாகம போட்டிக்கான பதில்கள், ஜெப-குறிப்புகள், அனுபவ சாட்சிகள் மற்றும் காணிக்கை அனுப்புவோர் ஊழிய இயக்குநரின் பெயருக்கு அனுப்புங்கள் (Online-வங்கி மற்றும் தொடர்பு விபரம்: பக்கம் 12-ல்). கிருபை உங்களோடு இருப்பதாக.

கிறிஸ்துவின் பணியில்
அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா

**வேத-வரிகள்-151** **யாக்கோபு-4:8**

# தமிழ் வேதாகமங்களின் ஒற்றுமைத் திரட்டு

### சத்திய வேதம் (ரேனியஸ்-1840)

பராபரனைச் சேருங்கள், அப்பொழுது அவரும் உங்க ளைச் சேருவார். பாவிகளே, உங்கள் கைகளைச் சுத்தமாக்குங் கள். இருமனமுள்ளவர்களே, உங்களிருதயங்ககளை பரிசுத்தஞ்செய்யுங்கள்.

### பரிசுத்த வேதாகமம் (பவர்-1867)

தேவனிடத்தில் சேருங்கள், அப்பொழுது அவர் உங்களி டத்தில் சேருவார். பாவிகளே, உங்கள் கைகளைச் சுத்தி கரியுங்கள். இருமனம் உள்ளவர்களே, உங்கள் இருதயங் ககளை பரிசுத்தமாக்குங்கள்.

### திருவிவிலியம் (பொது-1995)

கடவுளை அணுகிச் செல்லுங்கள், அவரும் உங்களை அணுகிவருவார். பாவிகளே, உங்கள் கைகளைத் தூய்மை யாக்குங்கள். இரு மனத்தோரே, உங்கள் உள்ளங்களைத் தூய்மைப்படுத்துங்கள்.

### பரிசுத்த பைபிள் (இ.ஆர்.வி-1998)

தேவனை நெருங்கிவாருங்கள், அவர் உங்களை நெருங் கிவருவார். நீங்கள் பாவிகள், எனவே, உங்கள் வாழ் வின் பாவத்தை நீக்குங்கள். நீங்கள் ஒரே மனதுடன் உங்கள் சிந்தயை பரிசுத்தமாக்குங்கள்.

பரி. யாக்கோபுவின் திருநாள் சிறப்பு தேவசெய்தி...

# விசுவாசமும் கிரியையும்

விசுவாசம், கிரியைகளோடேகூட முயற்சிசெய்து, கிரியைகளினாலே விசுவாசம் பூரணப்பட்டதென்று காண்கிறாயே. யாக்–2:22

## Faith and Works

You see that faith was active together with works, and by works, faith was made complete. Jam-2:22



சகோ. ராஜ்மேரி சார்லஸ்


## Eva. Sis. Rajmary E. Charles

GOOD-NEWS OF GOD FOR TODAY MINISTRIES, ERNAKULAM, KERALA STATE, SOUTH INDIA


கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளுக்கு அன்பின் வாழ்த்துக்கள்.

விசுவாசம் என்பது கிறிஸ்தவ வாழ்வின் உயிர்நாடி. ஒரு மனிதன் மூச்சில்லாமல் எப்படி வாழமுடியாதோ அதுபோல விசுவாசமில்லாமல் தேவனுக்கு பிரியமாய் இருக்க முடியாது. ‘‘விசுவாசம் என்பது நம்பப்படுகிறவைகளின் உறுதியும் காணப்படாதவைகளின் நிச்சய முமாய் இருக்கிறது’’ (எபி-11:6). விசுவாசம் கிரியை யினால் பூரணப்படும் என்று வேதம் கற்றுத்தருகிறது. விசுவாசமும் கிரியையும் நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றவை. ஒருபக்கம் மங்கிப்போனாலும் அது பயனற்றதாகிவிடும். அப்போஸ்தலன் யாக்கோபுவின் நினைவு நாளை கொண்டாடு கிற இச்சமயத்தில் யாக்கோபு நிருபத்தில் சொல்லப்பட்டி ருக்கிற, கிரியைகளினால் வெளிப்படுத்தப்படும் விசுவாசத்தைக் குறித்து தியானிக்க அழைக்கப்படுகிறோம்.

1. செத்த விசுவாசம்:

‘‘விசுவாசமும் கிரியைகளில்லாதிருந்தால் தன்னில் தானே செத்ததாய் இருக்கும்’’ (யாக்-2:17). விசுவாசிகளில் பலர் வேதத்தை நன்கு அறிந்திருப்பார்கள், அழகாக ஜெபிப்பார்கள் ஆனால் விசுவாசம் பேச்சில் மட்டுமே இருக்கும். அவர்கள் வாழ்விலோ செயலிலோ நாம் காண முடியாது. இத்தகையோரின் விசுவாசத்தைத் தான் யாக்கோபு, ‘செத்த-விசுவாசம்’ எனக் கூறுகிறார். இயேசு நன்மை செய்கிற வராய் இவ்வுலகில் சுற்றி வந்தார். நாம் அவ்வாறின்றி, ஏழை எளியோருக்கு எந்த நன்மையும் செய்யாமல், விசுவாச வார்த்தைகளை மட்டும் பேசிக்கொண்டு இருந்தோமானால் நம்முடைய விசுவாசம் செத்ததாய் இருக்கும். பரி. யாக்கோபு தன் நிருபத்தில் குறிப்பிடுகையில் ‘‘ஒரு சகோதரனாவது சகோதரியாவது வஸ்திரம் இல்லாமலும் ஆகாரமில்லாமலும் இருக்கும்போது, உங்களில் ஒருவன் அவர்களை நோக்கி: சமாதானத்தோடே போய், குளிர் காய்ந்து பசியாறுங்கள் என்று மட்டும் சொல்லி, அவர்களுக்கு வேண்டியவைகளை கொடாவிட்டால் பிரயோஜனமென்ன?’’ என்று

கேட்கிறார். இயேசுவும் இதையே, ‘‘இந்த சிறியரில் ஒருவனுக்கு எதைச் செய்யா திருந்தீர்களோ அதை எனக்கே செய்யாதிருந்தீர்கள்’’ (மத்-25:42) என்று சொல்லி நம்மை எச்சரிக்கிறார். இப்படிப்பட்டவர்களைக் குறித்துதான், ‘‘உங்கள் விசுவாசம் செத்ததா யிருக்கும்’’ என்று யாக்கோபு குறிப்பிடுகிறார். இப்படிப்பட் டோர், தேவனை விசுவாசித் தாலும் எந்த ஒரு மனமாற்றமும் இல்லாமல் தேவனுடைய இரட்சிப்பின் நோக்கத்தை நிறைவேற்றாமல் வாழ்வார்கள். இவ்வாறு பழைய மனிதனின் செத்த கிரியைகளுள்ள வாழ்க்கை வாழும் விசுவாசிகளையே ‘வீணான மனுஷன்’ என்று யாக்கோபு குறிப் பிடுகிறார். சர்தை சபையின் தூதனுக்கு எழுதும்படி பரி.யோவானுக்கு ஆவியானவர் சொல்லும்போது: ‘‘உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன்; நீ உயிருள்ளவனென்று பெயர் கொண்டிருந்தும் செத்தவனாய் இருக்கிறாய். உன் கிரியைகள் தேவனுக்கு முன் நிறைவுள்ளவை களாக நான் காணவில்லை’’ என்ற வசனத்தில் (வெளி:3:1,2) இதையே வெளிப்படுத்துகிறார்.

அன்பானவர்களே! விசுவாசத்தால் இரட்சிக்கப்பட்ட நாம் அதில் பூரணராகும் படிக்கு, நம் விசுவாசத்தை உயிருள்ளதாக்க பிரயாசப்படுவோம்.

2. மாய்மாலமான விசுவாசம்:

‘‘தேவன் ஒருவர் உண்டென்று விசுவாசிக்கிறாய், அப்படி செய்கிறது நல்லது தான், பிசாசுகளும் விசுவாசித்து நடுங்குகின்றன’’ (யாக்-2:19). பிசாசுகள் தேவனை விசுவாசிப்ப தாகக் காணப்பட்டாலும் வேத-வசனங்கள், பாதாளம், நியாயத்தீர்ப்பு பற்றிய அறிவு அவைகளுக்கு இருந்தாலும் அவை இருளை விட்டு ஒளியாகிய தேவனிடம் வருவதில்லை. எடுத்துக்காட்டாக, லேகியோன் என்ற பிசாசு இயேசுவைக் கண்டவுடன் அவருக்கு முன்பாக விழுந்து இயேசுவே தேவனுடைய குமாரனே என்று கூப்பிட்டு தங்கள் கூட்டத்தை பாதாளத்துக்கு போக கட்டளையிடும்படி வேண்டிக்கொண்டது (லூக் 2:28-31). இத்தகைய விசுவாசத்தையே மாய்மாலமான் விசுவாசம் என்கிறோம். இப்படிப்பட்ட விசுவாசிகள் தேவனுடைய வார்த்தையை நன்றாக அறிந்திருப்பர், ஆராதனையில் பக்திவிருத்தியை காண்பிப்பார்கள் ஆனால் மாய்மாலமாக கிரியை செய்வார்கள். தேவனுடைய இராஜ்யத் தைக் குறித்தும், அவருடைய மேன்மையைக் குறித்தும், அவருடைய வல்லமையைக் குறித்தும் நன்கு அறிந்து மற்றவர்கள் முன்பாக தேவனை மகிமைப்படுத்துவார்கள். ஆனால், தங்கள் கிரியைகள் பொல்லாதவைகளாய் இருப்பதால் ஒளியைப் பகைத்து இருளையே விரும்புவர். தேவனுடைய சந்நிதானத்தில் வரும்போது ஆராதித்து மகிழுவார் கள். ஆலயத்திற்கு வெளியே சென்றவுடன் மனிதனையும், உலக சிற்றின்பங் களையும் விரும்பி மனிதனை பிரியப்படுத்தி மகிழுவார்கள். இப்படி தேவனுக்கும் உலகத் துக்கும் ஊழியம் செய்பவர்களே மாய்மால விசுவசிகள் எனப்படுகிறார்கள்

இயேசு கிறிஸ்து இவர்களை வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகள் என்கிறார் (மத்-23:27). இவர்கள் மனுஷருக்கு முன்பாக நீதிமான்களாக காணப்படுவார்கள், ஆனால் உள்ளமோ மாயத்தினாலும் அக்கிரமத்தினாலும் நிறைந்திருக்கும். கடைசிகாலத்தில் மனுஷர் தற்பிரிய ராயும், பணப்பிரியராயும், சுபாவ அன்பில்லாதவர்களாயும், பரிசுத்தமில்லாதவர்களாயும், தேவபக்தியின் வேஷந்தரித்து கிறிஸ்துவை மறுதலிக்கிறவர்களாயும் இருப்பார்கள்

(1தீமோ-3:1-5). இப்படிப்பட்டவர்களை விட்டு விலக வேதம் நம்மை அறிவுறுத்துகிறது.

3. கிரியைகளுள்ள விசுவாசம்:

கிரியைகளினாலே விசுவாசம் பூரணப்பட்டதென்று காண்கிறாயே (யாக்-2:22). கிரியைகள் உள்ள விசுவாசம் என்றால் என்ன? பரி. யாக்கோபு: ‘‘நம் பிதாவாகிய ஆபிரகாம் விசுவாசத்தினாலே, தன் குமாரன் ஈசாக்கைப் பலிபீடத்தின் மேல் செலுத்தினபோது, கிரியைகளினாலே அல்லவோ நீதிமானாக்கப்பட்டான்? விசு வாசம் அவனுடைய கிரியைகளோடேகூட முயற்சிசெய்து, கிரியைகளினாலே விசுவாசம் பூரணப்பட்டதென்று காண்கிறாயே. (வச-21-22) என்று சொல்கிறார். மேலும் யாக்கோபு: ‘‘ராகாப் என்னும் வேசியும் இஸ்ரவேலின் தூதர்களை ஏற்றுக்கொண்டு வேறுவழியாய் அனுப்பிவிட்டபோது, கிரியைகளினால் அல்லவோ நீதியுள்ளவளாக்கப்பட்டாள்’’ (வச-25) என்கிறார். நாம் இருதயத்தில் விசுவாசிப்ப தோடு நிறுத்திவிடாமல் அதை ஆபிரகாம், ராகாப் ஆகியோரைப்போல் செயலில் காட்டுவதே கிரியைகளுள்ள விசுவாசமாகும்.

பரி. பேதுரு, ‘‘நீங்கள் கிறிஸ்தவராயிருப்பதினால் (விசுவாசத்தின் கிரியை களால்) பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து, அதின் நிமித்தம் தேவனை மகிமைப் படுத்துங்கள். துன்பப்படவேண்டியது அவசியமானதால், உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, கிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையும் உண்டாகும்’’. (1பேது 4:13-16, 1:6-7) என இதை உறுதிப்படுத்துகிறார்

ஆம், விசுவாச சோதனைகளின் நடுவில் வாழும் நாம், நம் விசுவாச-அறிக்கை மற்றும் விசுவாச-கிரியை (சுவிசேஷ-நற்செய்தி) நிமித்தம் அனுபவிக்கும் பாடுகளின் வழியாகவே நம் விசுவாசத்தை நிரூபிக்கிறோம். அதற்காக நாம் இயேசு கிறிஸ்துவை பின்பற்ற வேண்டும் அல்லவா? ஆம், இயேசுவை பின்பற்றுவதே விசுவாசத்தின் கிரியையாகும். இயேசு சொன்னார், ‘‘ஒருவன் என் பின்னே வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்’’ (மாற்-8:34) என்று. அதாவது விசுவாசத்துக்காக பாடுகளை அவமானங்களை ஏற்க இயேசு நமக்குக் கட்டளையிடுகிறார்.

பிரியமானவர்களே! செத்த விசுவாசமானது கற்பாறை நிலத்தில் விழுந்த விதை போன்றது. அது, வேர்-இன்றி உலர்ந்து உயிரற்றுப்போகும். மாய்மால-விசுவாசம் முட்கள் நடுவில் விழுந்த விதைபோன்றது, அதை, உலக-கவலை ஐசுவரியத்தின் மயக்கம் போன்றவை பலனற்றுப் போகச்செய்யும். கிரியைகளுள்ள விசுவாசம் நல்ல நிலத்தில் விழுந்த விதைபோன்றது, அது பன்மடங்காக பலன் தரும். நமது விசுவாசத்துக்கும் கிரியைகளுக்கும் தக்க பலனை அளிக்கும்படி கர்த்த ராகிய இயேசுகிறிஸ்து சீக்கிரமாய் வரப்போகிறார். எனவே நாம் துர்கிரியை களுக்கு விலகி நற்கிரியைகளினால் நம் விசுவாசத்தை காத்துக்கொள்ளுவோம். தேவன்தாமே நம்மனைவரையும் ஆசீர்வதித்து வழிநடத்துவாராக. ஆமென்.

கிறிஸ்துவுக்குள் உங்கள் அன்பு சகோதரி
சகோ. ராஜ்மேரி சார்லஸ்

சுவி. சகோ. ராஜ்மேரி E. சார்லஸ், இன்றைய இறை-நற்செய்தி ஊழியங்கள்.
எர்ணாகுளம், கேரள மாநிலம். தென்னிந்தியா.

வசன தியானம் - 142



அருட்திரு.தர்மராஜா

# மாசற்ற தூய பக்தியை நாடுவோம்

## பயனற்ற வீண் பக்தியைத் தவிர்ப்போம்

வசன-தியானம்
யாக்-1:26,27

விசுவாசிகள் தங்கள் நாவை அடக்காமல், தங்களை தேவபக்தியுள்ளவர்கள் என்று எண்ணினால் அவர்கள் தேவபக்தி வீணாயிருக்கும். திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும் படுகிற உபத்திரவத்தில் அவர்களை விசாரிக்கிறதும், உலகத்தால் கறைபடாத படி தங்களைக் காத்துக் கொள்ளுகிறதுமே பிதாவாகிய தேவனுக்கு முன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாகும். யாக்-1:26, 27

மாற்றம் எதையும் தராத, துன்பம் எதுவும் இல்லாத பக்தி (மதம்) எதற்கும் பயன் இல்லா தது.' என்றார் மார்ட்டின் லுத்தர். எனவே, பயனில்லாத பக்தி வேண்டாம் என்போம், மாசில்லாத பக்தியே வேண்டும் என உறுதி ஏற்போம்.

1. பயனற்ற வீண்-பக்தியைத் தவிர்ப்பது எப்படி?

நம் நாவை நமது கட்டுப்பாட்டுக்குள் வைக்கப் பழகுவோம். நமது குடும்பத்தில், நண்பர்-வட்டத்தில், பணித்தளத்தில், திருச்சபை ஐக்கியங்களில் நாம் பேசும் விதம் முக்கிய மானது. நமக்காக சில வேலைகளை செய்து தருபவர்களிடம் நாம் பேசும் விதம் மிக முக்கியமானது. பிற பக்தி மார்க்கத்தாரோடு நாம் பேசும் விதம் மிக மிக முக்கியமானது. இத்தகைய தருணங்களில் நாம் நமது வார்த்தைகளை அளந்து பேசாமல், நம் நாவை கட்டுப்படுத்தாமல் நம்மைநாமே தேவபக்தியுள்ளவர்களாக எண்ணி நம்மைநாமே ஏமாற்றிக்கொள்ள வேண்டாம். அப்படிப்பட்ட தேவபக்தி 'வீண்-பக்தி' என பரி.யாக்கோபு சொல்கிறார் (வச-26). இப்படிப்பட்ட பயனற்ற மதம் (பக்தி) நமக்கு வேண்டாம். எனவே, நம் நாவை கட்டுப்படுத்த உதவும்படி தூய-ஆவியானவரிடம் வேண்டுதல் செய்வோம்.

2. மாசற்ற தூய-பக்தியைத் நாடுவது எப்படி?

மாசற்ற தூய-பக்திக்கான முதல்-படி யாக்-1:27மு. குழந்தைகள் காப்பகங்களிலுள்ள ஆதர வற்ற குழந்தைகளுக்கு உதவலாம். நம் அருகில் தனிமையில் வாழும் முதிய விதவை களுக்கு உதவி செய்யலாம். பெண்கள் மற்றும் முதியோர் பராமரிப்பு மையங்களில் அவர்களை விசாரித்து ஜெபித்து உதவலாம். வீடற்ற ஒரு ஏழை குடும்பத்துக்கு தங்கும் இடம் தரலாம். நம் ஊரில் தனிமையில் வாழும் வெளிநாட்டவருக்கு உதவி செய்யலாம்.

மாசில்லா தூய-பக்திக்கான இரண்டாம்-படி யாக்-1:27ந மாசற்ற தூய-பக்தி புனித வாழ்வை யும் உள்ளடக்கியது. புனித வாழ்வு வாழ முயல்வோம். நாம் இயேசுவை பின்தொடர்வதே இல்லை மாறாக அழுக்கான, கறைபடிந்த உலக வாழ்வையே தொடர்கிறோம். எனவே, உலக-கறைக்கு நம்மை விலக்குவோம்.

இவ்வாறு பயனற்ற பக்தியை தவிர்த்து, தூய பக்தியை தேட முயல்வோம். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

அருட்திரு. எஸ.ஜே.டி. தர்மராஜா, ஊழிய-இயக்குநர், நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு மற்றும் இரட்சிப்பு ஊழியங்கள், சாலிகிராமம், சென்னை-93, தென்னிந்தியா.

# நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு ஊழியங்கள்

## Good Tidings Bible-Prints Ministries

### (GOOD SEEDS - எமது கைப்பிரதிகள் - நல்ல விதைகள்)

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே! சுவிசேஷ ஊழியங்களின் பயன்பாட்டுக்காக 20-வகையான கைப்பிரதிகளை வெளியிட்டு அவற்றை கிறிஸ்துவை அறியாத மக்களுக்கு விநியோகம் செய்து வருகிறோம் மட்டுமல்ல சுவிசேஷ ஊழியம் செய்யும் அன்பர்களுக்கும் திருச்சபைகளுக்கும் கைபிரதிகளை இலவசமாய் வழங்கி வருகிறோம். ஒரு வகை கைப்பிரதியை வெளியிட ஆகும் செலவு ரூ.4000/- மட்டும். கைப்பிரதிகளை Sponsor செய்து இயேசுவின் அன்பை அனைத்து மக்களும் அறிந்திட உதவிடுங்கள். Sponsor செய்ய விரும்பும் அன்பர்கள் நமது ஊழிய இயக்குநரை தொடர்பு கொள்ளும் படி அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.

| No.&Title of the Tract | Sponsor's Name |
|---|---|
| 1. மைனாவின் கதை - The story of Myna | - Rev. S.J.D. Dharmaraj, Che-93 |
| 2. வக்கீல் நீதிபதியானார் - Counsel became Judge | - Mr.T. David Manohar, Che-93 |
| 3. மாட்டு உண்ணி - The Cattle Tick | - Mr.R.G. Sutharsingh, Che-93 |
| 4. கர்வமான காகிதப்பட்டம் - The Envious Kite | - Mrs. Rani Samuelraj, Che-93 |
| 5. டிரைவர் இல்லாத ரயில் - A Train without Driver | - Mr. Prasad Samuel, Cud-6 |
| 6. சீரழிக்கும் சீமைக்கருவை - Acacia of fence | - Mr.P.H. Jaychandran, Che-93 |
| 7. குடிநீர் குழாயில் குண்டுத்தவளை - Frog in tap | - Mr.R.C.P. Nixon, Che-93 |
| 8. இளவரசனும் கைதியும் - Prince and the Convict | - Mr.J. Albert, Kumbakonam |
| 9. கடலில் கல்லறைத் தோட்டம் - Bermuda Triangle | - Mr.C. James, Sirkali |
| 10. பற்றியெரியும் மனிதர்கள் - Human Combustion | - Mr.S. Nixon Everbright, AP |
| 11. டைட்டானிக் கப்பல் - The Titanic Ship | - Dr. Sharmila Selvaraj, Cud-1 |
| 12. நாக்குப்பூச்சி - The Tape Worm | - Mr. Arthur Masilamani, Che-7 |
| 13. அதிசய சொட்டு மருந்து - Miracle Drops | - Rev. S.J.D. Dharmaraj, Ch-93 |
| 14. எரியும் முன் எச்சரிக்கை - Warning before death | -Mr.A. Santharaj, Kumbakonam |
| 15. பிணக்குவியலில் இருந்து - From pile of Corpses | - Mr. S.J.P. Raja, Che-126 |
| 16. வெந்நீரில் தவளை - The Frog Experiment | - Mrs. Stella David, Tuticorine |
| 17. கன்கார்டு விமானம் - The Concord Aircraft | - Mr.B. Wilson, Che-92 |
| 18. ஜீன் வால் ஜீன் - Jean Valjean | - Mr. Samson Abraham, Che-93 |
| 19. பெர்லின் சுவர் - The Berlin Wall | - Mr.A. Inbaraj, Kumbakonam |
| 20. மாணக்கின் சாலை - El Camino de la Muerte | - Mr. Frankline Christus, Ch-93 |

கைப்பிரதிகளை Sponsor செய்த தேவபிள்ளைகளுக்கு எங்கள் நன்றி. கைப்பிரதிகளை எங்களிடம் இலவசமாகப் பெற்று உங்கள் ஊழியங்களில் பயன்படுத்தும்படி அன்புடன் வேண்டுகிறோம். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமேன்.

அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா, ஊழிய இயக்குநர், நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு மற்றும் இரட்சிப்பு ஊழியங்கள், சாலிகிராமம், சென்னை-93. தென்னிந்தியா.

வேத ஆராய்ச்சி - 74



Rev. Dr. D. சுரேஷ் ராஜன்

# சங்கீதங்கள் கற்றுத்தரும் விலையேறப்பெற்ற சத்தியங்கள்

Episode - 74

Author: Rev. Dr. D. Suresh

## சங்கீதம் – 74

முன்னுரை:-

கி.மு.587ம் ஆண்டில் எருசலேம் நேபுகாத்நேச்சார் அரசனால் சிறைபிடிக்கப்பட்டு சிதைக்கப் பட்டது. எருசலேம் தேவாலயம் முழுவதுமாக தீக்கிரையாக்கி அழிக்கப்பட்டது. மக்கள் பாபிலோனுக்கு சிறைக் கைதிகளாகக் கொண்டுசெல்லப்பட்டனர். சிறைவாசத்தின் நாட்களில் ஆசாபின் வம்சாவழியாக வந்த ஒருவர் இப்பாடலை எழுதியிருக்கக்கூடும் என வேத-அறிஞர்கள் கூறுகின்றனர். இந்த சங்கீதம் நமது சமுதாயம்-திருச்சபை சார்ந்த வாழ்வின் ஒரு பிரதிபலிப்பாக உள்ளது. இறைமக்கள் உணர்வடையவும், தங்கள் வாழ்வை இறைவனுக்கு அர்ப்பணிக்கவும் இச்சங்கீதம் நம்மை உற்சாகப்படுத்துகிறது. நாம் கற்றுக்கொள்ளும் வகையில் இச்சங்கீதத்தை பின்வருமாறு மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம்.

1. வேதனை:- (வச:1-11)

சிறையிருப்பின் நாட்களில் வாழ்ந்துகொண்டிருந்த இந்த சங்கீதக்காரர் (பாடல் ஆசிரியர்), தன் கண்முன் (சிதைக்கப்பட்ட நிலையில்) காட்சியளிக்கும் எருசலேம் நகரின் பழைய நிலையை மனக்கண் முன் நிறுத்தி புலம்புகிறதைப் பார்க்கிறோம். ஒருவேளை மணிப்பூர் மாநிலத்தில் வாழும் இறைமக்களில் பலர் இத்தகைய மனநிலையில்தான் இன்று வாழ்ந்துகொண்டிருப்பார்கள் என நான் நம்புகிறேன். சில மாதங்களுக்கு முன்வரை மகிழ்ச்சியோடு ஆண்டவரை ஆராதித்த ஆலயங் கள் இன்று பகைவர்களால் தீக்கிரையாக்கப்பட்டு தரைமட்டமாக்கப்பட்டுவிட்டன. மனித-மிருகங்களின் மதவெறிச் செயலினால் பல்லாயிரக்கணக்கான மக்கள் தங்கள் அடையாளத்தை இழந்து அகதிகள் போன்று காணப்படுகின்றனர். ஊடகங்கள் வழியாய் செய்திகளை அறிந்து கொள்ளும் நமக்கே மணிப்பூர்-நிகழ்வுகள் கண்ணீரை வரவழைக்குமானால், நேரடியாக அங்கு பாதிக்கப்பட்டு நிர்கதியாக இருக்கும் மக்களின் வேதனை எவ்வளவு கொடியதாய் இருக்கும். இத்தகைய சூழ்நிலைகளோடு நம்மை ஐக்கியப்படுத்தி பாத்தால் மட்டுமே இந்த சங்கீதக்காரரின் வேதனையை நாம் புரிந்துகொள்ள இயலும். எருசலேம் தேவாலயத்தில் பதிக்கப்பட்டிருந்த பொற்தகடுகள் பெயர்த்தெடுக்கப்பட்டன. வாச்சிகள் மற்றும் கோடரிகளால் தேவாலயத்தின் மர-வேலைகள் எல்லாம் சேதப்படுத்தப்பட்டு முடிவில் தீக்கொளுத்தப்பட்டன. ‘‘எங்களுடைய அடையாளம் அழிந்து போய்விட்டது.’’ (வச-9) என சங்கீதக்காரர் வேதனையோடு புலம்புவதை இங்கு காண்கிறோம். இன்று உலகளாவிய திருச்சபை ‘செழிப்பின்-உபதேசம்’ ‘பாலுறவுக்கடுத்த துர்-உபதேசம்’ ‘தனிமனித வழிபாட்டு மாற்று உபதேசம்’ போன்றதான கள்ள உபதேசங்களால்

அழிந்துகொண்டி ருக்கிறது என பட்டியலிட முடியும். விசுவாசப் பெருங்குடி மக்களாகிய நாம், இவைகளைக் குறித்து வேதனை கொண்டிருக்கிறோமா?

2. நம்பிக்கை:- (வச:12-17)

சங்கீதக்காரர், இங்கு தேவனுடைய ஏகாதிபத்தியத்தை எடுத்துச்சொல்லி, தேவனுடைய ஆளுகைக்குள்ளாகவே அனைத்தும் இயங்குகிறது என்ற தனது பற்றுறுதியை தெளிவாக வெளிப்படுத்துகிறார். சூழ்நிலைகள் நமக்கு எதிரிடையாக இருந்தாலும், இறைவனின் எல்லைக்குள்ளாகவே (ஆளுகைக்குள்ளாகவே) அனைத்தும் இயங்குகிறது என்பதே யதார்தமான உண்மை. கடவுள் சமுத்தி ரத்தை இரண்டாக உடைத்துப் பிளப்பவர். வலுசர்ப்பம் முதலை போன்றவற் றைப் போல் பலம் கொண்டிருந்த பார்வோனின் சேனையை அதமாக்கியவர். சங்கீதக்காரர், ‘‘பகலும் உம்முடையது, இரவும் உம்முடை யது; தேவரீர் ஒளியையும் சூரியனையும் படைத்தீர். பூமியின் எல்லைகளையெல்லாம் திட்டம் பண்ணினீர், கோடைகாலத்தையும் மாரிகாலத்தையும் உண்டாக்கினீர்’’ (வச-16,17) என்று சொல்வதன்மூலம் தேவன் யார் என்பதை அறிந்துகொண்டு தனது நம்பிக்கையை உறுதிசெய்வதை இங்கு காண்கிறோம்.

நமது திருச்சபைகள் எவ்வளவாக சின்னாபின்னம் செய்யப்பட்டிருந்தாலும், மணிப்பூர் மாநில கிறிஸ்தவர்களின் நம்பிக்கை எவ்வளவாய் சிதைந்திருந்தாலும், தேவன் இன்றும் ஆட்சி செய்கிறார், அவரைத் தாண்டி எதுவும் நடக்க முடியாது, என்ற பற்றுறுதியைக் கொண்டவர்களாக நாம் இருக்கவேண்டும்.

3. வேண்டுதல்:- (வச:18-23)

சங்கீதக்காரர் இப்பகுதியில் தனது மன்றாட்டை ஏறெடுக்கிறார். சூழ்நிலைகளைக் பார்த்து துவண்டுவிடாமல், நம்பிக்கையோடே இறைவேண்டல் செய்கிறவர்களாக நாம் இருக்க வேண்டும் என்பதை இங்கு விளக்குகிறார். சத்துருவின் சக்திகள் முற்றிலுமாய் அதமாக்கப படவேண்டும் என்பதே இந்த சங்கீதக்காரரின் உள்ளக்கிடக்கையாய் இருக்கிறது. குறிப்பாக சில விண்ணப்பங்களை நாம் கவனிக்கவேண்டும். ‘‘உமது ஏழைகளின் கூட்டத்தை என்றென்றைக்கும் மறவாதேயும்’’ (வச-19) ‘‘துன்பப்பட்டவன் வெட்கத்தோடே திரும்ப விடாதிரும்’’ (வச-21) இவ்வாறான வேண்டல்களின் பலனாக ஆண்டவர் நமக்குச் செய்யும் நன்மைகளுக்காக, அவருடைய மகிமைக்கு சாட்சியாக அவரைத் துதிப்பவர் களாக நாம் இருக்கவேண்டும்.

முடிவுரை:-

அன்பானவர்களே! நமது திருச்சபையின் சீரழிந்த நிலையையும், குறிப்பாக மணிப்பூர் மாநில விசுவாசிகளின் நிலையையும் பார்த்து மனம் துவண்டுவிடாமல், ஆண்டவரே, ‘‘உமது உடன்படிக்கையை நினைத்தருளும் (வச-20) ‘‘தேவனே, எழுந்தருளும். உமக்காக நீரே வழக்காடும்’’ (வச-22) என்ற விண்ணப்பத்தோடு கடவுளின் பாதத்தை அண்டிக்கொள்வோம். கர்த்தர்தாமே தமது கிருபையை நமக்குத் தந்தருளி வழிநடத்திக் காத்துக்கொள்வாராக. ஆமென்.

சங்கீதங்கள் கற்றுத்தரும் விலையேறப்பெற்ற சத்தியங்கள். தொடரும்...

AUTHOR: REV. DR. D. SURESH RAJAN, CO-FOUNDER, BIBLE TRANSLATION INITIATIVES, COIMBATORE, SOUTH INDIA
ஆசிரியர்: அருட்திரு. அறிவர். டி. சுரேஷ் ராஜன்,
இணை நிறுவனர், வேதாகம மொழிபெயர்ப்பு முயற்சிகள், கோயம்புத்தூர். தென்னிந்தியா.

# வேதாகம போட்டி-152 சரியான பதில் அளித்தோர்

1) அமலியா லோகநாதன் TVM
2) அன்பு சுதந்திரம் TIN
3) ஏஞ்சல் சி. TIN
4) ஏஞ்சல் ராஜதுரை CHE
5) ஏஞ்சலின் பிரியா ஏ. TIN
6) ஏஞ்சலின் ரூஸ்வெல்ட் CHE
7) ஏஞ்சலின் வில்லியம்ஸ் CHE
8) அன்னாள் ஜெபக்கனி CBE
9) அனிதா ஜாண் CBE
10) அனிதா மோகன்ராஜ் ERO
11) அரோமா சாத்ராக் TIN
12) ஆர்தர் மாசில்லாமணி CHE
13) அருள்செல்வி ஜாண்ஸன் TIN
14) பாமா மாதவன் KAL-AP
15) பெல்சி தங்கராஜ் CHE
16) பெனிட்டா பிராங்க்ளின் CHE
17) பெட்டி’ பிரின்ஸ் CHE
18) பியூலா ஜேசுராஜன் PON
19) செலினா பென்சி வில்சன் DR, KUW
20) சந்திராபாய் மாசிலாமணி AVD
21) சந்திரலேகா KAL-AP
22) சந்திரா சாமுவேல் TIN
23) சார்லஸ் ஃபின்னி DR, CHE
24) சார்லஸ் சாலோமோன் WG-CMR SHI
25) சார்லட் டேவிட் CHE
26) செல்லம் சங்கீதா TIN
27) சித்ரா பெஞ்சமின் TVL
28) சிட்டி TR. TVL
29) கிறிஸ்டல் ஜாய் யோபு TPT
30) கிறிஸ்துதாஸ் GOP
31) கிறிஸ்டி ஆயிட்டஸ் MAR-TIN
32) கிறிஸ்டி ஞானராஜ் CHE
33) சிசிலி புஷ்பம் டேவிட் CHE
34) டெய்ஸி ஜெபதாஸ் TCY
35) டெய்ஸி சாம் TUT
36) டேனியல் தாமஸ் TIN
37) டேனிங் சொர்ணா ஜெஸ் TIN
38) டேவிட் ஜே.ஆர். CHE/CBE
39) டெல்வின் இம்மானுவேல் TPT
40) தேவமணி ஆபிரகாம் TUT
41) தேவநேசம் ராஜாசிங் CHE
42) டோராபாய் CHE
43) எலிசபெத் செல்லத்துரை CHE
44) எமிமாள் MDU
45) எஸ்தர் D.R. TIN
46) எவாஞ்சலின் ஜோன்ஸ் DR. SLM
47) குளோரா BBC TEN
48) குளோரி ரவீந்திரன் TIN
49) ஞானம் ஜெபராஜ் TIN
50) ஞானம் பிலிப் CHE
51) ஞானராணி CG. TVL
52) ஞானசெல்வி மோசஸ் CHE
53) கோல்டா ஜேசுபாதம் MUM
54) கிரேஸ் டேனி TEN
55) கிரேஸ் பிரின்ஸ் APM-TEN
56) கிரேஸ்லின் சாந்தி TIN
57) கிரேஸ் பொன்மணி ரெக்ஸ் CHE
58) கிரேஸி கிறிஸ்டோபர் CHE
59) கிரேஸியா ஜெயபால் CHE
60) கிரிசெல்டா செய்லர் CHE
61) குணவதி ஜெபமணி CHE
62) ஹெலன் ஜான்சிராணி TIN
63) ஹெலென் ஜெனிபர் பாண்டியன் CHE
64) ஹெலன் திலக் TUT
65) ஹேமா அஜீத் CHE
66) ஹேமா கேப்ரியேல் BAN
67) ஹெப்சிபா மங்களராஜ் TIN
68) ஹிம்லா ராஜகுமாரி CHE
69) இளவரசி ஜோபிதா CBE
70) இன்பவல்லி கலைச்செல்வன் MDU
71) இந்திரா கெத்ஸி டேவிட் TIN
72) ஜமீலா செல்வராஜ் CHE
73) ஜேன்ஸ் (ஜான்ஸி) ANI
74) ஜேன் தர்மராஜ் TIN
75) ஜான்ஸி சந்தியா MKM
76) ஜாஸ்மின் ஞானதாஸ் CHE
77) ஜெபா ஜெயராஜ் CHE
78) ஜெபக்குட்டி மோசஸ் TIN
79) ஜெபரஞ்சிதம் மெர்லின் TUT
80) ஜெபசீலி கிளின்டன் CHE
81) ஜெபஸ்டின் G. TIN
82) ஜெமீலா நிக்ஸன் CHE
83) ஜெமிமா CHE
84) ஜெனித்தா செல்வின் TIN
85) ஜெனித்தா ஷெருபா ஞானவேல் DHA
86) ஜெனிட்டா ஹெலன் CBE
87) ஜென்ஸி ஞானேஷ் MKM-TIN
88) ஜெரின் ஸ்டீபன் CHE
89) ஜெஸி செல்லதுரை CBE
90) ஜெஸி ஜெயக்குமார் TIN
91) ஜெயா ஆல்பர்ட் KUM
92) ஜெயபால் TUT
93) ஜோனா ஸ்டீபன் AVD
94) ஜான்ஸி ராணி CHE
95) ஜோஸ்பின் ஜெஸி CHE
96) ஜாய்ஸ் பாண்டியன் CHE
97) ஜூலியட் ஜெபா CHE
98) ஜூலியட் ஜெயக்குமார் TIN

...வேதாகம போட்டி-152 பதிலளித்தோர் தொடர்ச்சி

99) கலா கிருபாகரன் TIN
100) கலையரசி செல்வராஜ் CHE
101) கஸ்தூரி எலியாஸ் TIN
102) கிங்ஸ்லி ரவிகுமார் CHE
103) கிங்ஸ்லி தங்கமணி CHE
104) கோயில்பிள்ளை ஞானத்தாய் APM
105) லதா மைக்கேல்ராஜ் CHE
106) லீலா டேவிட் CHE
107) லீலா ஜெபராஜ் THA-MAH
108) லீலா ஜோஸப் CBE
109) லில்லி ஜாண்ஸன் CHE
110) லிஸி டென்சிங் TIN
111) மேபல் கிறிஸ்டியான் CHE
112) மல்லிகா ஜாய்ஸ் TCY
113) மல்லிகா V. CHE
114) மணிமேகலை ஜெயக்குமார் TIN
115) மனோகரம் தனராஜ் NAZ
116) மரிய பாப்பா CHE
117) மரியாள் ஜே.எஸ். TUT
118) மெஜிலா ஜோஷ்வா TUT
119) மெர்சி தனராஜ் CBE
120) மெர்சி ஃபுளோரா பாஸ்கர் VEL
121) மெரிட்டா ஜெயபாலன் TCY
122) மியூரியல் புஷ்பராஜ் CHE
123) நகோமி நிர்மலா CHE
124) நதியா லாரன்ஸ் TVR
125) நிக்ஸன் எவர்பிரைட் TIN
126) ஆலிவ் ஜெயபாலன் CBE
127) பாக்யபாய் ஆரோன் TIN
128) பமீலா எட்வின் KAN
129) பெர்சி பால் பொன்சிங் TUT
130) பிங்க்லின் தேவமலர் சந்தோஷ் CHE
131) பொன்மணி உத்தமசிங் NAZ
132) பிரேமா பூபாலன் AVD
133) பிரேமா ஜானி PCM
134) பிரேமா மணி TIN
135) பிரேமா ஸ்டாலின் CHE
136) பிரின்ஸ் தயாநிதி CHE
137) பிரின்ஸ்லின் ஷைனி APM-TEN
138) பிரிசில்லா தாஸ் CHE
139) பிரிஸ்கில்லாள் சசி CBE
140) பிரியா ராஜ்குமார் CHE
141) ராஜபிரமீளா TPT
142) ராஜ்மேரி சார்லஸ் KER
143) ரமோலா அதிசயராஜ் TIN
144) ராணி ஃபுளோரா APM-TEN
145) ராணி பிரபாகர் TIN
146) ராணி சாமுவேல்ராஜ் CHE
147) ரத்னா டென்னிஸன் CBE
148) ரத்னாவதி பாண்டியன் CHE
149) ரெஜினா விக்டர் TIN
150) ரோஸ்லின் மார்கிரெட் CHE
151) ரோஸி ஸ்டீபன் CHE
152) ரூபவதி நோபிள் TIN
153) ரூத் ஜாண்ஸன் TIN
154) சலோமி மனோகர் DR. CHE
155) சாமுவேல் டேவிட் TPT
156) சாரா பாலசிங் MDU
157) சரோஜினி எலிசபெத் CHE
158) செல்சி ஒதெனியல் TEN
159) செல்வ அமுதா ஜார்ஜ் CHE
160) செல்வ பென்ஸி ஆபேல் KOT-AP
161) செல்வராஜ் K CBE
162) செல்வராணி ஆல்பர்ட் CHE
163) செல்வி அமிர்தராஜ் TVR
164) ஷாலி எடிசன் CHE
165) சாந்தி ஆசேர் TIN
166) சாந்தி ஆல்பர்ட் PCT
167) சாந்தி ஜெயசீலன் CHE
168) சாந்தி ரோஸ் CBE
169) ஷர்மீளா செல்வராஜ் DR. CUD
170) ஷீபா சாம்ஸன் CHE
171) ஷெரீன் ஜெபராஜ் PAN
172) சவுந்தரம் சாலமோன் CHE
173) சவுந்தரி POD-TVL
174) ஸ்டெல்லா டேவிட் TUT
175) ஸ்டெல்லா கனகராஜ் CHE
176) சுகிர்தா ஆல்வின் CHE
178) சுகிர்தா சின்னதுரை TIN
179) சுஜாதா சாமுவேல் CHE
180) சுமித்ரா B. CHE
181) சுந்தரிபாய் TUT
182) சுசீலா தியோடர் TCY
183) சுவர்ணலதா அற்புதராஜ் CHE
184) தனசீலி ஞானராஜ் CHE
185) தாரா மாணிக்கம் CHE
186) தெல்மா ஸ்டேன்லி MDU
187) உமா குளோரி CHE
188) வனஜா ஹெர்பர்ட் TIN
189) வசந்தா அன்பன் TIN
190) வசந்தா சந்திரசேகர் CBE
191) வசந்தி கருணாகரன் CHE
192) வசந்தி வாசன் CHE
193) விஜயராணி A. CHE
194) விஜி டேனியல் CHE
195) விமலா ஜெயக்குமார் TUT
196) விண்ணரசி ரோஸ் CHE
197) வினோலியா ஜேம்ஸ் KOV
198) வினோலியா வில்சன் VAN
199) வைலட் கிறிஸ்டோபர் TIN
200) வைலட் சைரஸ் CHE

PRAYER-WINDOW PRAYER-WINDOW

ஜெப-ஜன்னல் ஜெப-ஜன்னல்

## ஜெப–ஜன்னல் ஜெப நேரங்கள் ஜூலை – 2023

| | |
|---|---|
| **ஜெப-ஜன்னல்-1 காலை-ஜெபம்** | நாள்: 14–07–2023 இரண்டாம் வெள்ளி<br>நேரம்: காலை 5முதல் 6மணி வரை. |
| **ஜெப-ஜன்னல்-2 மதிய-ஜெபம்** | நாள்: 21–07–2023 மூன்றாம் வெள்ளி<br>நேரம்: மதியம் 1முதல் 2மணி வரை. |
| **ஜெப-ஜன்னல்-3 இரவு-ஜெபம்** | நாள்: 28–07–2023 நான்காம் வெள்ளி<br>நேரம்: இரவு 8முதல் 10மணி வரை. |

பிரியமானவர்களே! இந்த ஜெப–ஜன்னல் ஜெப–நேரங்களில் தானி–6:10 வசனத்தின்படி **"தானியேல், மேலறையில் எருசலேம் தேவாலயத்திற்கு நேராய் பலகணிகள் திறந்திருக்க"** ஜெபித்ததைப்போல் நமது இயக்குநரும், ஜெப–ஜன்னல் ஜெப–வீரர்களும் ஆலயம் நோக்கி ஜெபிக்கவிருக்கிறார்கள். நீங்களும் இந்த நேரங்களில் உங்கள் ஆலயம் நோக்கி ஜெபிக்கும்படியாக அன்புடன் உங்களை வேண்டிக்கொள்கிறோம்.

## பரி. யாக்கோபுவின் திருநாள் – 2023 – The feast of St. James

### யாக்கோபு நிருபம் ஓர் ஆய்வு – A survey of the Epistle of St. James

யாக்கோபு நிருபம் உலகெங்கும் சிதறுண்டு வாழும் இஸ்ரவேலின் 12-கோத்திரத்தாருக்கு எழுதப் பட்டுள்ளது. ஆயினும் இதிலடங்கிய பரி.யாக்கோபின் போதனைகள் யூதக்கிறிஸ்தவர்களுக்கும் பிற கிறிஸ்தவர்களுக்கும் பொருந்தவே அமைந்துள்ளது. இந்நிருபம் கிறிஸ்தவ வாழ்வுக்கான அறிவுரை. எனினும், பழைய ஏற்பாட்டு ஞானநூல்களின் தன்மையைக் கொண்டுள்ளது. இது எழுதப்பட்ட காலத்தைக் கணிப்பது கடினம். திருமறை அறிஞர்கள் கி.பி.50லிருந்து கி.பி.100 வரையுள்ள வெவ்வேறு காலக் கணிப்புகளைக் கொடுக்கிறார்கள்.

ஆசிரியர்: இந்நிருபத்தின் ஆசிரியர் பரி.யாக்கோபு ஆவார். தம்மை, ‘கடவுளுக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கும் ஊழியனாகிய யாக்கோபு’ என்று குறிப்பிடுகிறார் (யாக்-1:11). திருச்சபை மரபின்படி இவர் இயேசுவின் சகோதரர், எருசலேம் திருச்சபையின் தலைவர். பவுலுடன் நல்ல தொடர்பு உடையவர் (கலா-1:19, அப்-15:13). இந்நிருபத்தின் எழுத்து-நடை, கருத்துக்கள், இயேசு வோடுள்ள நெருக்கமான தொடர்பு பற்றிய குறிப்பு இல்லாதது, போன்றவற்றின் அடிப்படையில் இத்திருமுகத்தின் ஆசிரியர் வேறு ஒரு யாக்கோபாக இருக்கலாம் எனவும் கருத இடமுண்டு.

உள்ளடக்கம்: இந்நிருபத்தின் முக்கியக் போதனை, கிறிஸ்தவர்கள் தங்கள் அனுதின கடமைகளை பிழையின்றி செய்துமுடிக்க வேண்டும் என்பதாகும். உண்மையான கிறிஸ்தவ வாழ்வு சுயவெறுப் பையும், தூய-வாழ்வையும் உள்ளடக்கியது (யாக் 1:1-27). கடவுள் மீதுள்ள விசுவாசத்தை செயலில் காட்டவேண்டும். செயலற்ற-விசுவாசம் செத்த-விசுவாசம் ஆகும் (யாக் 2:1-26). நாவடக்கம், அமைதி-வாழ்வு ஆகியவை ஒருவரை ஞானியாகவும், தூயவராகவும் மாற்றுகின்றன (யாக் 3:1-18).

வேதபகுதி ஓசியா முழுவதும்

# வேதாகம போட்டி-153

ஓரிரு வார்த்தைகளில் பதிலளிக்கவேண்டும்

**வேதவசன இருப்பிடமும் எழுதவேண்டும்**

பதிலளிக்க கடைசி நாள் ஜூலை-25

1. இஸ்ரவேல் பலனற்ற திராட்சச்செடி அது யாருக்கு கனிகொடுக்கிறது?
2. தேவனுக்கு விரோதமாய் கலகம்பண்ணினபடியால் குற்றம் சுமத்தப்பட்டிருக்கும். எது?
3. இரத்தக்காலடிகளால் மிதிக்கப்பட்டிருக்கிறது - இது எந்த பட்டணம்?
4. கர்த்தர் உங்கள்மேல் நீதியை வருஷிக்கப்பண்ணுமட்டும் எதற்கு காலமாயிருக்கிறது?
5. நீங்கள் ஜீவனுள்ள தேவனின் பிள்ளைகள் என யாருக்குச் சொல்லப்படும்?
6. பெயேரியின் குமாரனாகிய தீர்க்கத்தரிசியின் பெயர் என்ன?
7. ஒரு பெண்ணுக்காக ஊழியஞ்செய்து ஒரு பெண்ணுக்காக ஆடு மேய்த்தது யார்?
8. இஸ்ரவேல் தன்னை உண்டாக்கினவரை மறந்து எவைகளைக் கட்டுகிறான்?
9. 'எப்பிராயீம் புல்லை மேய்ந்து கொண்டற்காற்றை பின்தொடருகிறான்' - சரியா, தவறா?
10. 'பூமி தானியத்துக்கும் எண்ணெய்க்கும் மறுமொழி கொடுக்கும்' - சரியா தவறா?
11. வேசித்தனமும் திராட்சரசமும் மதுபானமும் இருதயத்தை மயக்கும்' - சரியா தவறா?
12. எப்பிராயீமின் மகிமை ஒரு பறவையைப்போல் பறந்துபோம் - சரியா தவறா?
13. யூதாவின் பிரபுக்கள் 'இவைகளை' ஒதுக்குகிறவர்களுக்கு ஒப்பானார்கள்:

அ) எல்லைகளை ஆ) நிதிகளை இ) ஆஸ்திகளை ஈ) தண்ணீர்களை

14. இனி எனக்கும் விக்கிரகங்களுக்கும் என்ன என்று 'இவன்' சொல்லுவான்:

அ) மோவாப் ஆ) எப்பிராயீம் இ) ஏதோம் ஈ) ஓசியா

15. இஸ்ரவேலர் 'இதை' வெறுத்தார்கள், சத்துரு அவர்களைத் தொடருவான்:

அ) தேவனை ஆ) கற்பனையை இ) நன்மையை ஈ) ஆலயத்தை

16. 'இவன்' தாயின் கர்ப்பத்தில் தன் சகோதரனின் குதிகாலைப் பிடித்தான்:

அ) யூதா ஆ) எப்பிராயீம் இ) யோவேல் ஈ) யாக்கோபு

17. தீர்க்கனை மணந்த சோரப்பெண்! திப்லாயிமின் மகளான தீரப்பெண்! திரு-தரிசன பிள்ளைகள் பெற்ற வீரப்பெண்! யார் இவர்? பெயர் என்ன?

18. எகிப்தியனிடம் எடுபிடிபோல் ஓடுறான்! அசீரியனிடம் அடிமைபோல் ஆடுறான்! புறாவை-போல் புரிதலின்றி இருக்கிறான்! புத்திகெட்டு பூரணத்தை இழக்கிறான்! யார் இவன்?

19. விடியற்காற்றில் கலைந்திடும் வானத்தின் வெண்மேகம்! கதிரொளியில் கரைந்திடும் காலையின் வெண்பனி! இவைபோல் தோன்றி, இவைபோல் ஒழியும் இது என்ன?

20. அடங்காத இது ஆட்டுக் கிடாரி! அடங்காப் பிடாரி, அடங்காப் பிடாரி! ஊர்-மேயும் ஆட்டுக்குட்டி! சோரம்போன மேட்டுக் குடி! யார் இவர்கள்?

**பதில்களை அனுப்பவேண்டிய முகவரி ADDRESS FOR SENDING ANSWERS**

திருமதி. ஜெயசீலி தர்மராஜா, எஃப்–1, முதல் மாடி, பாரதி பிளாட்ஸ், எண்: 4/2-A, பாரதி தெரு, காந்தி நகர், சாலிகிராமம், சென்னை–93. வாட்ஸ்–அப்: 9789914463

Mrs. Jeyaseeli Dharmaraja, Flat: F-1, First floor, Bharathi flats, No: 4/2-A, Bharathi Street, Gandhinagar, Saligramam, Chennai-93.
E-mail: ratchippu@hotmail.com/siddharmaraja@gmail.com. Whatsapp: 9789914463



சகோ. C. ஏஞ்சல்

# கர்த்தருடைய நாமங்களின் மகத்துவங்கள்

THE ETERNAL COVENANT AIONIA DIATHIKI

## நித்திய உடன்படிக்கையானவர்

EPISODE - 50 ஏயோனியா டியாதிக்கி பாகம் - 50

கர்த்தர் தம் ஜனத்திற்கு மீட்பை (இயேசுவை) அனுப்பி,
தம் உடன்படிக்கையை நித்திய உடன்படிக்கையாகக் கட்டளையிட்டார். சங்–111:9

God sent redemption (Jesus) unto His people. He hath commanded His covenant eternal. Psa-111:9

தம்முடைய குமாரனும் நம்முடைய கர்த்தருமாய் இருக்கிற இயேசு கிறிஸ்துவுடனே ஐக்கியமாய் இருப்பதற்கு தமது இரத்தத்தினால் உடன்படிக்கை பண்ணினவரின் நாமத்தில் இரட்சிப்பின் விசுவாசிகளுக்கு ஜுலை-மாத நல்வாழ்த்துக்கள்.

எபி-13:20 நித்திய உடன்படிக்கையின் (இயேசுவின்) இரத்தத்தினால் ஆடுகளின் பெரிய மேய்ப்பரான அவரை மரித்தோரிலிருந்து ஏறிவரப்பண்ணின தேவன்.

தீத்-2:14, கொலோ-1:14 தமது இரத்தத்தினாலே பாவமன்னிப்பைத் தந்து, சொந்த ஜனங்களாக மீட்டு, நற்கிரியைகைளைச் செய்யும் பக்திவைராக்கியம் உள்ளவர்களாக்கி, நித்திய உடன்படிக்கையின் ஆசீர்வாதங்களைத் தந்த இயேசுகிறிஸ்துவுக்கு கோடி ஸ்தோத்திரம்.

ரோம-9:4 புத்திர சுவிகாரம், மகிமை, உடன்படிக்கைகள், நியாயப்பிரரமாணம், தேவாராதனை, வாக்குத்தத்தங்கள் நம்முடையவைகள்.

ஆதி-6:18 முதல் உடன்படிக்கை: நீயும் உன்னோடுகூட உன் குமாரரும், உன் மனைவியும், உன் குமாரரின் மனைவிகளும் பேழைக்குள் பிரவேசியுங்கள்.

யாத்:-34:10 2வது உடன்படிக்கை: பூமியில் எந்த ஜனங்களிடத்திலும் செய்யப்படாத அதிசயங்களை உங்களுக்கு முன்பாகச் செய்வேன். உன்னோடிருக்கும் ஜனங்களெல்லாரும் கர்த்தருடைய செய்கையைக் காண்பார்கள். உன்னோடு கூட இருந்து நான் செய்யும் காரியம் பயங்கரமாய் இருக்கும்.

2கொரி:-3:6,8 புது உடன்படிக்கையின் ஊழியக்காரராகும்படி உங்களை தம் இரத்தத்தாலே அவர் தகுதியுள்ளவர்களாக்கினார். இந்த உடன்படிக்கை ஆவிக்குறியதாய் இருக்கிறது. ஆவிக்குறிய ஊழியம் நீதியைக் கொடுக்கும். அது அதிக மகிமையுள்ளதாய் இருக்கும்.

ஜெபம்: புது உடன்படிக்கையின் மத்தியஸ்தரான இயேசுவே, உமக்கு ஸ்தோத்திரம். நான் உங்களுக்கு நன்மை செய்யும்படி உங்களைவிட்டு பின்வாங்குவதில்லை என்ற நித்திய உடன்படிக்கையை உன்னோடு பண்ணி, என்னைவிட்டு அகன்றுபோகாதபடிக்கு எனக்குப் பயப்படும் பயத்தை இருதயத்திலே வைப்பேன் (எரே-32:40) என்ற ஜீவனுள்ள வார்த்தையை எங்களில் நிறைவேற்றுவீராக. இயேசுவின் நாமத்தில், ஆமென் பிதாவே.

கிறிஸ்துவுக்குள் உங்கள் அன்பு சகோதரி
**C. Angel**

தொகுப்பு: சகோதரி. C. ஏஞ்சல் B.Sc, திருநெல்வேலி,

தேன்துளி வேதவசனக் கதை–146*. . .

# பகைவர் மீது காட்டும் அன்பு


சகோ. அசரியா

சகோ. M. அசரியா ஞானதாஸ் M.A. M.Ed.

அமெரிக்க தேசத்தில் ஒரு பண்ணை-தோட்டத்தில் அடிமைகள் (நீக்ரோக்கள்) வேலை செய்துவந்தனர். அவர்களுள் தேவனுக்கு பயந்த மில்லர் என்ற ஒரு மனிதன் தன் கடின உழைப்பால் முதலாளிக்கு நல்ல வருமானத்தை ஈட்டித் தந்தான். அவனுடைய முதலாளி ஒரு பக்திமான். அவர் மில்லரின் கடின உழைப்புக்காக அவனை உயர்த்தி, தொழிலாளர் களுக்குத் தலைவனாக நியமித்தார். மில்லர் தன் வேலைகளை செய்து முடித்தபின், அங்கு வயோதிபம் மற்றும் சுகவீனத்தால் வேலை செய்யமுடியாதவர்களின் வேலைகளை யும் செய்துமுடிக்க அவர்களுக்கு உதவி வந்தான். இதைக் கண்ட முதலாளி மேலும் பல பொறுப்புகளைக் அவனுக்குக் கொடுத்தார்.

ஒரு நாள் மில்லர் தன் முதலாளியின் கட்டளைப்படி சந்தையில் 10-அடிமைகளை ஏலம் எடுத்துவந்து முதலாளி முன் நிறுத்தினான். முதலாளி மில்லரைப் பார்த்து, 9-அடிமை களை சரியாக தேர்ந்தெடுத்திருக்கிறாய். ஆனால் 10-வது அடிமை கிழவனாயிருக்கிறானே என்றார். அதற்கு மில்லர், ‘‘இந்த கிழவர்தான் 20-ஆண்டுகளுக்கு முன் என் தகப்பனாரை கடப்பாரையால் தலையில் அடித்துக் கொன்றவர். இவரை நான் பழிக்குப் பழி வாங்காமல் இயேசு கிறிஸ்துவு டைய மாதிரியின்படி இவரை அன்பாக நடத்துவேன் என்றான். முத லாளியும் அதை ஏற்றுக்கொண்டார். அதன்படி, மில்லர் அந்த முதியவரை தன் அறையில் அமரவைத்து, அவரிடம், ‘‘நீங்கள் தினமும் நன்றாக சாப்பிட்டு என் அறையிலே ஓய்வு எடுங்கள். எக்காரணங்கொண்டும், யார் என்ன சொன்னாலும் வேலை செய்வதற்கென தோட்டத்துக்கு வரவேண்டாம். உங்கள் வேலையும் நானே செய்வேன். உங்கள் ஆயுட் காலம் வரை நான் உங்களை நன்றாகப் கவனித்துக் கொள்வேன், எனவே மகிழ்ச்சியாய் இருங்கள் என்றான். மில்லரின் அன்பைக் கண்ட முதியவர் தன் தவறை அறிக்கையிட்டு, மனந்திரும்பி, இயேசுவை ஏற்றுக்கொண்டு, புதிய மனிதனாக மாறினார்.

பிரியமானவர்களே! நம்மையும் பகைத்து, குற்றஞ்சாட்டி, பிறர்முன் நம்மை இழிவாய் பேசுகிறவர்கள் அநேகர் உண்டு. அப்படிப்பட்டவர்களை நாம் மனதார மன்னித்து, அவர் களை நேசிக்கிறோமா? இயேசுவின் அன்பை அவர்களிடம் காட்டுகிறோமா? இந்த விஷ யத்தில் நாம் குறைவுபட்டால் நம்மை சரிசெய்துகொண்டு மில்லரைப்போல செயல்படு வோம். இயேசு நம்மையும் ஆசீர்வதிப்பார். வேதம் இவ்விதமாய்ச் சொல்லுகிறது...

**குற்றத்தை மன்னிப்பது மனிதனுக்கு மகிமை. நீதி–19:11**

**மனுஷருடைய தப்பிதங்களை மன்னித்தால் உங்கள் பரமபிதா உங்களுக்கும் மன்னிப்பார். மத்–6:14**

**கர்த்தர் அக்கிரமத்தை மன்னித்து பாவத்தை நினையாதிருப்பார். எபி–31:34**

**கர்த்தர் மன்னிக்கிறதற்கு தயை பெருத்திருக்கிறார். ஏசா–55:7**

EPISODE 12

# இந்திய கிறிஸ்தவ திருச்சபை வரலாறு

1ம் நூற்றாண்டு முதல் 21ம் நூற்றாண்டு வரை

## இரண்டாயிரம் ஆண்டு வரலாறு..
## இரண்டாம் வருகைக்கு தயாராகு...

கட்டுரை ஆசிரியர்
அறிவர். திருமதி. சலோமி மனோகர்



இந்திய திருச்சபை சரிதை:
(1முதல் 21ம் நூற்றாண்டுவரை)
தொகுதி-3 பகுதி-2

தொகுதி-3 ஐரோப்பிய-ஆசிய தொடர்பு-மோதல் பகுதி-2 போர்த்துகீசியர் வருகை-குடியேற்றம்

15ம் நூற்றாண்டின் இறுதியில் ஆப்பிரிக்கக் கண்டத்தின் சில பகுதிகளின் வியக்கத்தக்க துல்லியமான வரைபடங்கள் இருந்தன. 16ம் நூற்றாண்டின் இறுதியில் வரைபடங்களின் நல்ல விநியோகம் இருந்தது. 1488ல் பர்தோலமியூ டயஸ் இந்தியாவுக்கான கடல் வழி உள்ளது என தெளிவு படுத்தினார் ஆயினும் ஏறக்குறைய பத்து ஆண்டுகளாக அவரது கண்டுபிடிப்பு களை தொடர எதுவும் செய்யப்படவிலலை.

கி.பி.1492ம் ஆண்டில் வாஸ்கோடகாமாவுடன் இருந்த ஒருவர், ‘நாங்கள் கிறிஸ்த வர்களையும் மசாலா பொருட்களையும் தேடி வந்துள்ளோம்’ என பதில் அளித்தார். போர்த்துகீசியர்கள் கோழிக்கோடு மக்களை கிறிஸ்தவர்கள் என்றும் அவர்களின் கோவில் களை தேவாலயங்கள் என்றும் நினைத்தார்கள். வாஸ்கோ டகாமாவும் அவரது ஆட்களும் இந்துக் கோவிலில் உள்ள ‘மேரி’யின் உருவத் திற்கு முன்பாக ‘தேவாலய’ பிரார்த்தனை செய்தனர். கி.பி.1500ல் பெட்ரோ அல்வார்ஸ் கப்ரால் தலைமையிலான இரண்டாவது போர்த்துகீசிய குழு வரும்வரை இந்த தவறு கண்டுபிடிக்கப்படவில்லை.

போர்சுகீசிய மாலுமி வாஸ்கோ-டகாமா இந்தியாவிற்கு கடல்வழியை கண்டறிந்து ஆறு ஆண்டுகளுக்குள் போர்சுகீசிய அரசு கி.பி.1505ல் கொச்சியில் தனது முதல் அரச சார்பாண்மையராக (வைசுராய்) பிரான்சிசுகோ-டெ-அல்மீடியாவை நியமித்தது. இவர் அஞ்சதிவா, கண்ணூர், கொச்சி, சில்வா ஆகிய இடங்களில் கோட்டைகளைக் கட்டினார். இந்திய பெருங்கடல் பகுதியில் கப்பல் படையை வலிமைப்படுத்தி ஆதிக்கத்தை ஏற்ப டுத்தினார். இவரின் இக்கொள்கையே நீலநீர்க் கொள்கை ஆகும். கி.பி.1509ல் எகிப்தியர் களால் இவர் கொல்லப்பட்டார். அதைத்தொடர்ந்து கொச்சியின் 2வது ஆளுநராக அல் போன்ஸா-டி-அல்புகர்க் (கி.பி.1510-1515) நியமிக்கப்பட்டார்.

கி.பி.1510ல் அல்போன்ஸா பிஜப்பூர் சுல்தானிடம் இருந்து கோவாவைக் கைப்பற்றி னார். பின்னர் கோவா தலைநகரம் ஆயிற்று.

இவர் இந்தியர்களோடு சுமூக உறவு கொண்டு ஐரோப்பிய - இந்திய திருமண உறவை ஆதரித்தார். பாரசீக வளைகுடாவில் ‘ஆர்மஸ்’ என்னுமிடத்தில் ஒரு துறைமுகத்தைக் கட்டினார். இவர் ‘சதி’யை ஒழிக்க முற்பட்டதால், வில்லியம் பெண்டிங் பிரபுவின் முன்னோடி என அழைக்கப்படுகிறார். விஜயநகரப் பேரரசுடன் சுமூக உறவு கொண்டிருந்தார். கி.பி.1515ல் அல்போன்ஸா கோவாவில் காலமானார். தொடர்ந்து கி.பி.1529ல் நைநோ-டா-சுன்கா என்பவர் ஆளுநராக பதவியேற்றார். இவர் கி.பி.1530ல் தலைநகரை கொச்சியிலிருந்து கோவாவிற்கு மாற்றினார். கி.பி.1534ல் சிட்டா கியோன், சேட்கோவான் ஆகிய பகுதிகளில் கோட்டைகளை அமைத்தார். கி.பி.1538ல் கிரைகோ-டி-நொராங்கா என்பவர் ஆளுநராக பதவி வகித்தார். கி.பி.1548ல் இவர் பீஜப்பூரைத் தோற்கடித்து கோவா வரை முன்னேறினார்.

போர்ச்சுகீசியர்கள் வணிகத்தலம் அமைத்த இடங்கள்:

போர்ச்சுக்கீசியர் மேற்குக் கடற்கரையிலுள்ள பம்பாய் (மும்பை), டாமன், சால்செட் மற்றும் கிழக்குக் கடற்கரையிலுள்ள ஹுக்ளி (வங்காளம்), சாந்தோம் (சென்னை) ஆகிய இடங்களில் தங்கள் வணிக தளங்களை அமைத்தனர். கி.பி.1565ல் தலைக்கோட்டைப் போரில் விஜயநகர அரசு வீழ்ந்ததால் போர்ச்சுகீசியரும் சரிந்தனர். கி.பி.1631ல் முகலாய மன்னன் காசிம்கான் ஹுக்ளியில் இருந்து போர்த்துகீசியரை வெளியேற்றினான். புகையிலை, அன்னாசி, பப்பாளி, முந்திரி, மிளகாய் மற்றும் உருளை ஆகிய சாகுபடிகளை போர்த்துகீசியர்கள் இந்தியாவில் அறிமுகம் செய்தனர். கி.பி.1663ல் டச்சுக்காரர்கள் மலபார் கடற்கரைப்பகுதியை போர்த்துகீசியரிடமிருந்து கைப்பற்றினர். எனவே, டச்சுக்காரர்களின் வருகைக்குப் பின் போர்த்துக்கீசியர்களால் இந்தியாவில் நிலைக்க முடியவில்லை.

கி.பி.1752ம் ஆண்டு வரை போர்சுகீசிய-இந்திய அரசில் இந்தியப் பெருங்கடலில் இருந்த அனைத்து போர்சுகீசிய குடியேற்றங்களும் அடங்கி இருந்தது. இது தெற்கு-ஆப்பிரிக்காவிலிருந்து தெற்கு-ஆசியா வரை பரவியிருந்தது. இதன் தலைமைப் பொறுப்பில் அரச சார்பாண்மையர் (வைசுராய்) அல்லது ஆளுநர் (கவர்னர்) இருந்தனர். 1752ல் மொசாம்பிக் தனி அரசாகப் பிரிந்தது. கி.பி.1844ல் போர்சுகீசிய-இந்திய அரசு மக்காவு, திமோர் மற்றும் இந்தோனேசிய சோலார் ஆகியவற்றின் ஆட்சியை நிறுத்திக்கொண்டது.

கி.பி1947ம் ஆண்டு இந்தியாவின் விடுதலையின்போது போர்சுகீசிய-இந்தியா மேற்கு கடலோரத்தில் கோவா, டாமன், தியூ மற்றும் உட்புறத்தில் அமைந்த தாத்ரா, நாகர்ஹவேலி ஆகிய பிறநாட்டு ஆட்சிப் பகுதிகளையும் கொண்டிருந் தது. பொதுப்பயன்பாட்டில் போர்சுகீசிய பகுதிகளை அனைத்தும் உள்ளடக்கியது ‘கோவா’ என்று அறியப்படுகிறது. 1954ம் ஆண்டில் தாத்ரா மற்றும் நாகர்ஹவேலிப் பகுதிகளை போர்ச்சுக்கீசிய அரசு இழந்தது. 1961ம் ஆண்டில் மற்ற மூன்று பகுதிகளும் இந்திய இராணுவ நடவடிக்கையால் கைப்பற்றப்பட்டன. ஆனால், இதனை போர்ச்சுக்கல் கி.பி.1975வரை ஏற்றுக்கொள்ளவில்லை. கார்னேசன்-பூ- புரட்சி மற்றும் ஏகாதிபத்திய இசுதடோ-நோவோ ஆட்சியின் வீழ்ச்சிக்குப் பிறகே இந்த இணைப்பை போர்ச்சுக்கல் ஏற்றுக்கொண்டது. போர்ச்சுகல் மன்னர்கள் இந்தியர்களை கத்தோலிக்க மதத்திற்குள் ஏற்றுக்கொள்ள உத்தரவிட்டார்கள். போர்த்துகீசியர்கள் தங்கள் ராஜாவின் வெற்றி மற்றும் கடவுளின் மகிமைக்காக உழைத்ததால், வர்த்தகத்துடன் கிறிஸ்தவமும் இந்தியாவில் பின்னிப்பிணைந்தது.

இந்திய கிறிஸ்தவ திருச்சபை வரலாறு தொடரும்...

Author: Dr. Mrs. Salomi Manohar, Asst. Professor Rtd.,
(Pope’s College Sawerpuram), Thiruvanmiyur, Chennai. South India

# ஜெப-ஜன்னல் ஜெபக்குறிப்புகள்

**கர்த்தரை நோக்கி மன்றாடி ஜெபிப்போம் - Come! Let us intercede to God**

1) அகில உலக சமாதானத்துக்காக... உக்ரைன்-ரஷ்யா போர் மற்றும் சூடான்-உள்நாட்டுப் போர் முடிவுக்கு வர... இலங்கை, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் வங்கதேச பொருளாதாரம் சீரடைய... பேரிடர்களிலிருந்து மக்கள் பாதுகாக்கப்பட...

2) இந்திய மக்களின் நல்வாழ்வுக்காக... இந்தியாவில் மதவாதம், வன்முறைவாதம், பிரிவினைவாதம் போன்றவை வேரறுக்கப்பட... சிறுபான்மை மக்களுக்கு எதிரான ஒடுக்குதல் கள் குறைய... இந்திய ஒன்றிய அரசு மக்களை பாரபட்சமின்றி நடத்த... பொருளாதாரம்-விலைவாசி சீரடைய... நீதிமன்றங்களில் நீதியரசர்கள் பாரபட்சமின்றி நீதி வழங்க...

3) தமிழ்நாட்டு மக்களின் நல்வாழ்வுக்காக... மக்கள் இன - மத - மொழி வேறுபா டின்றி அமைதியாக வாழ... தமிழ்நாட்டில் விவசாயம், தொழில்கள், வியாபாரம் சிறக்க... மத-பிரிவினை வாதங்கள், வன்முறைவாதங்கள் கட்டுப்படுத்தப்பட...

4) திருமதி. மெர்லின், திருமதி. பாக்கியா, திருமதி. திலகவதி மகேஷ், திருமதி. வைலட், திருமதி. சுதா, திருமதி. பிரியா சுதிர், திருமதி. புஷ்பாவதி, திருமதி. ஹனா விஜய் ஆகியோருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க...

5) நம் பிள்ளைகள் ஜாஸ்மின், கி∴ப்ட்சன் தங்கராஜ், பிரின்ஸ் ஜேக்கப், ஜெனிபர், சிந்தியா பிரகாஷ், ஜோ∴ப்னா, ஜாஷ்வா மேத்யூ ஆகியோரின் உயர்-கல்வி படிப்பிற்காக...

6) திரு. வெஸ்லி சாமுவேல், திரு. நெல்சன் (நகோமி), திரு. பால் நந்தகோபால், திருமதி. சுந்தரிபாய், திரு. அப்பன் டேவிட், திருமதி. ஜரீன் வாக்கர், திருமதி. ∴பிளாரன்ஸ் ராஜமணி, திரு. பிலிப், திருமதி. ஞானரத்தினபாய் ஆகியோரின் சரீர சுகத்திற்காக...

7) திருமதி. ஐலீன் செல்லத்துரை, திருமதி. ரத்னாபாய் சாம், திருமதி. விமலா டேவிட், திருமதி. மேரி கிரேஸ், திருமதி. மகிமா சந்திரன், திரு. பி.ஹெச். ஜெயச்சந்திரன், திருமதி. வசந்தா அன்பன், திரு.டி. மனோகர், திருமதி. சுகிர்தா சின்னதுரை, திருமதி. சார்லெட் டேவிட், திருமதி. ஜெஸி ஜெயக்குமார் ஆகியோரின் குடும்ப ஆசீர்வாதங்களுக்காக...

8) நமது ஊழிய ஆதரவாளர்களான திருமதி. வினோலியா வில்சன், திரு. எமர்சன் ஆண்ட்ரூஸ், திருமதி. ஜெயம் மேரி நெல்சன், திருமதி. கஸ்தூரி எலியாஸ், திருமதி. சார்லட் டேவிட், திருமதி. ஷீலா பிரசாத் சாமுவேல், திரு. நிக்ஸன் எவர்பிரைட், செல்வி. ஷைனி, திருமதி. அரோமா சாத்ராக், திரு. சாம்சன் ஆபிர காம், திரு. எஸ்.ஜே.பி. ராஜா, திரு. அசரியா ஞானதாஸ், திருமதி. நிறைமதி ஜாண்ஸன் திருமதி. வனஜா ஹெர்பர்ட் ஆகியோரது குடும்பங்களுக்காக...

9) திருமதி. ∴பிரீடா தங்கதுரை, அருட்பணி. எஸ்தர் கிங்ஸ்லி சுகபிரசவத்துக்காக...

10) உயர்-கல்விக்கு முயற்சி செய்யும் நம் பிள்ளைகளுக்கு அவர்கள் விரும்பிய படிப்பில் இடம் கிடைக்க, வெற்றியை தவறவிட்டவர்களுக்கு துணைப்-பொதுத்-தேர்வில் நல்ல ரிசல்ட் கிடைக்க...

# வேதாகம போட்டி-152 (தானியேல்) சரியான விடைகள்

1. கிழக்கு வெளுக்கும்போது தானி:-6:19
2. கரடிக்கு ஒப்பான 2ம் மிருகம்-4:17
3. தரியு தானி:-9:1
4. 60முழம், 6முழம் தானி:-3:1
5. தானியேலுக்கு தானி:-1:7
6. சொப்பனத். அர்த்தம்-சொல்ல 2:16
7. நேபுகாத்நேச்சார் தானி:-2:1
8. தரியு, கோரேஸ் தானி:-6:28
9. தவறு தானி:-2:21
10. சரி தானி:-12:12
11. சரி தானி:-5:31
12. தவறு தானி:-5:25
13. ஆ - மேல்ஷார் தானி:-1:11
14. இ - மாடுகள் தானி:-4:33
15. ஈ - பாழாக்கும் அருவருப்பு - 12:11
16. ஈ - தராசில் தானி:-5:27
17. சாத்ராக்,மேஷாக்,ஆபெத்நெகொ 3:23-27
18. தரியு ராஜா தானி:-6:9,16,23
19. பெல்சாத்சார் ராஜா தானி:-5:2-7
20. 4-வாலிபர் தானி:-1:11-17


## CONTACT DETAILS AND BANK DETAILS OF OUR MINISTRIES

**CONTACT DETAILS OF OUR MINISTRIES:**
**CALL**: 9962924900/9789914464.
**WHATSAPP:** 9789914463/7871676100
**E-MAIL**: ratchippu@hotmail.com/
sjddharmaraja@gmail.com
**POSTALADDRESS:** REV. S.J.D. DHARMARAJA, MISSION DIRECTOR, NO: 4/2-A, BARATHI ST., GANDHI NAGAR, SALIGRAMAM, CHENNAI - 93.
**WEBSITE ADDRESS:** www.ratchippu.in/ratchippu.in

**BANK DETAILS FOR SENDING OFFERTORY**
**NAME:** DHARMARAJA SJD.
**S.B.ACCOUNT NO**: 601071548.
**BANK:** INDIAN BANK,
**BRANCH:** NESAPAKKAM BRANCH
**IFSC CODE:** IDIB000N122.
**BANK ADDRESS:** K.K.NAGAR, CHENNAI-78.
**GOOGLE PAY (G-PAY) NAME AND NO.:**
REV. DHARMARAJA SJD: 9789914463

## அப்போஸ்தலனாகிய பரி. யாக்கோபுவின் திருநாள்
### The feast of Apostle St. James – 25th July 2023

பரி. யாக்கோபு அல்லது பெரிய-யாக்கோபு இயேசுவின் உறவினர் மற்றும் யோவானின் சகோதரர். யோவான் ஸ்நானனின் சீடராயிருந்து பின்னர் இயேசுவின் சீடரானவர். இடிமுழக்கத்தின் மகன்களில் ஒருவராக இயேசுவால் பெயர் இடப்பட்டவர். இயேசு கிறிஸ்து சிலுவையில் அடிக்கப்பட்டதைத் தொடர்ந்து, ஐபீரியன் தீபகற்பத்தில் இயேசுவின் அன்பைப் பறைசாற்ற யாத்திரை சென்றார். அவர் யூதேயாவுக்குத் திரும்பிவந்தவுடன், கி.பி 44ம் ஆண்டு முதலாம் ஏரோது அகிரிப்பா அரசனால் சிரச்சேதம் செய்யப்பட்டார் (அப்-12). அவரது நினைவு நாள் ஜூலை-25ல் ஆசரிக்கப் படுகிறது. இவர் ஸ்பெயின் நாட்டின் புனிதர் ஆவார்.



Ratchippu Tamil Monthly. Registered News Paper.
Date of Publication: First week of every month
RNI Regn. No.: TNTAM/2012/48197. Postal Regn. (RNP) No.: TN/CC (S) DN/468/22-24.
Licensed to post without prepayment under WPP No.: TN/PMG(CCR)WPP-583/22-24.
The due date for Posting: 8th, 9th & 10th of every month. Posted on: 10th July 2023.
Posted at: RMS Patrika Channel Window, Egmore, Chennai-600 008.

# செய்தித்துளிகள்

1. கொரோனா காலத்தில் நிறுத்தி வைக்கப்பட்ட சீன-நியூசிலாந்து நேரடி விமான-சேவை, ஆக்லாந்து- ஷென்செென் நகரங்கள் இடையே ‘ஹைனன்-ஏர்லைன்ஸ்’ நேரடி விமான சேவை மூலம் மீண்டும் தொடங்கப்பட்டது.

2. இந்தியாவில் அரசு மருத்துவமனைகளில், சிறந்த சேவை செய்த செவிலியருக்கு வழங்கப்படும் ‘பிளாரன்ஸ் நைட்டிங்கேல்-2022’ விருது தேர்வுபெற்ற 30-செவிலிய ருக்கு ஜனாதிபதி முர்மு அவர்களால் வழங்கப்பட்டது.

3. தமிழக ஓய்வூதியர்களின் மருத்துவ காப்பீடு அடையாள அட்டையில் புகைப்படம் இல்லாத நிலையில், ஓய்வூதியர்-இணையரின் புகைப்படத்துடன்கூடிய அடையாள அட்டை வழங்க தமிழ்நாடு அரசு உத்தரவு.

4. அமேசான் கேஷ்-ஆன்-டெலிவரி ஆர்டரில், ஆர்டர்-தொகை-போக, கூடுதலாக ரூ.50,000வரை (ரூ.2000கரன்சி நோட்டுகள் உட்பட) பிரதிநிதியிடம் நேரில் கொடுத்து, ‘அமேசான் பே’யில் கிரெடிட் செய்து கொள்ளலாம் என அமேசான் அறிவிப்பு.

5. தேசிய-தடகள ஆண்கள் நீளம்-தாண்டுதலில் 8.41மீ தாண்டிய கேரள-வீரர் முரளி ஸ்ரீசங்கர் வரும் ஆகஸ்டு மாதம் நடக்கும் புடாபெஸ்ட்-உலக-தடகளம் மற்றும் சீனாவில் நடைபெறும் ஆசியன் கேம்ஸ்க்கு தகுதி பெற்றார்.

Posted on: 10 July 2023

To

If undelivered Please return to:

**REV.S.J.D. DHARMARAJA**
MISSION DIRECTOR
RATCHIPPU TAMIL MONTHLY,
NO: 4/2-A, BHARATHI STREET,
GANDHI NAGAR, SALIGRAMAM,
CHENNAI-93 TAMIL NADU SOUTH INDIA

Owned & Published by: S.J.D. Dharmaraja. Published from No:6-A, Ambedkar St., Gandhinagar, Saligramam, Chennai-93. Printed by: S.Isaac Prince at Sams Graphics, No: 1, 12th Avenue, Ashok Nagar, Chennai - 600 083. Editor: M. Azariah Gnanadoss.